செய்தி வெளியீடு எண்: 260/2017 நாள் :05.05.2017

**தாங்கள் வாங்கும் பொருட்களின் தரத்தில் குறைபாடுகள் இருந்தால் அவற்றை சுட்டிகாட்டி தரமான பொருட்களை பெற நுகர்வோர் உரிமைகளுக்காக போராடும் குணத்தை பொதுமக்கள் வளர்த்து கொண்டு செயல்படவேண்டும்!**

**தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தினவிழாவில் கவிதை பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் கேடயத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்!!**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள காயிதே மில்லத் அரங்கில் தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தினவிழாவில் கவிதை பேச்சு மட்டும் கட்டுரை போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி மற்றும் கல்லூரியை சார்ந்த 19 மாணவ மாணவிகளுக்கு முதல் இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுக்கான சான்றிதழ் மற்றும் கேடயத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன் இ.ஆ.ப., அவர்கள் வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

இவ்விழாவிற்கு மாவட்ட வருவாய் அலுவலர் மரு.தா.செங்கோட்டையன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது.

தேசிய நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் என்பது 1986 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. அதனடிப்படையில் எந்தவொரு பொருளையும் வாங்கும் நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இன்று வரை இவ்விழா ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகிறது. நமது இந்திய நாட்டில் சுதந்திரம் அடைந்த பிறகு பாரத பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்லால் நாட்டின் வளர்ச்சிக்காக பொருட்களை இறக்குமதி செய்தால் பல்வேறு முன்னேற்றங்களை அடைய முடியும் என்று இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. அப்போது அப்பொருட்களில் பாதுகாப்பு குறைபாடுகள் அதிக அளவில் கண்டறிப்பட்டது. இதனால் பொருட்களை வாங்கும் மக்களுக்கு அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அதனடிப்படையில் நுகர்வோர்களுக்கு பாதுகாப்பு உரிமை, தகவல் பெறும் உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, முறையிடும் உரிமை, குறைதீர்க்கும் உரிமை, நுகர்வோர் கல்விக்கான உரிமை, தூய்மையான சுற்றுசூழலுக்கான உரிமை, அடிப்படை தேவைகளுக்கான உரிமை என 8 உரிமைகளும நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வோடு இருத்தல், ஈடுபாட்டுடன் இருத்தல், தேவைக்கு அதிகமான நுகர்வை தவிர்த்தல், தவறு செய்யும் வணிகர் பற்றி புகார் செய்தல், பொருட்களை சேவைகளையும் முறையாக பயன்படுத்தல், சுற்றுச்சூழல் குறித்து பொறுப்புணர்ச்சி, கூட்டுமுயற்சி என 7 கடமைகளும் வகுக்கப்பட்டுள்ளது. இந்த உரிமைகள் மற்றும் கடமைகளையும் நுகர்வோர்கள் தெரிந்துக்கொண்டு அதன் மூலம் தரமான மற்றும் பாதுகாப்பான பொருட்களையும் சேவைகளையும் பெற்று பயன்பெற வேண்டும்.

மேலும் சேவைகளை பயன்படுத்தும்போதும் பொருட்களை வாங்கும் போதும் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சுற்றுச்சூழலுக்கு கேடுவிளைவிக்கக்கூடிய பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். போலியான விளம்பரங்களை பார்த்து ஏமாறாமல் விழிப்புணர்வுடனும் செயல்படவேண்டும். மேலும் நுகர்வோர் தங்களின் உரிமைகளை பெற நுகர்வோர்களுக்கு என்று மாவட்ட நுகர்வோர் குறைதீர்வு மன்றம், மாநில நுகர்வோர் குறைதீர்வு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மன்றங்களின் மூலம் நுகர்வோர் தங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை அணுகி எளிதில் தீர்த்து கொள்ளலாம். வேலூர் மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பு கல்வி மற்றும் விழிப்புணர்வு பணிகளுக்காக குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள் இன்றைய நவீன காலத்தில் பல்வேறு பொருட்களையும் சேவைகளையும் அன்றாடம் வாங்கி உபயோகிக்கிறார்கள் அவற்றின் தரம் மற்றும் சேவையில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அவற்றிற்கான தீர்வு கிடைக்கும் வரை போராடும் குணத்தை வளர்த்து கொண்டு செயல்படவேண்டும். அப்போதுதான் வருங்கால சந்ததியினரும் பயன்பெறுவார்கள் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

விழாவில் கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் ஓவியப்போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி மற்றும் பள்ளிகளை சார்ந்த 19 மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் கேடயங்களையும், மின்னனு குடும்ப அட்டைகளை விரைவாக வழங்கியமைக்காக குடியாத்தம் வட்டம் மற்றும் ஆற்காடு வட்ட வழங்கல் துறைகளில் பணியாற்றி அலுவலர்களுக்கு நற்சான்றிதழ்களையும், நுகர்வோர் பாதுகாப்பு சங்கங்களின் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி பாராட்டினார்.

இவ்விழாவில் பள்ளிகளை சார்ந்த மாணவ மாணவியர்கள் பங்குபெற்ற நுகர்வோர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இவ்விழாவில் மண்டல இணை பதிவாளர் கூட்டுறவு சங்கங்கள் திரு.திருகுணஜயப்பத்துரை, த.நு.பொ.வா.கழக மண்டல மேலாளர் திருமதி.குப்பம்மாள், இணை இயக்குநர் கல்லூரி கல்விகள் திரு.ஏ.ஜெயராஜ், நுகாவோர் பாதுகாப்பு சங்க தலைவர்கள் திரு.கே.குமரேஸ்வரன், திரு.டி.பஷீருதீன், திரு.ஜனார்த்தனன், திரு.வி.குணசீலன் மற்றும் அனைத்து வட்ட வழங்கல் அலுவலர்கள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் கலந்துக்கொண்டனர்.

இவ்விழாவில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திரு.வேணுசேகரன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் தனி வட்டாட்சியர் குடிமை பொருள் திரு.இளஞ்செழியன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்-9

5/5/17

05/5/17